1991 செப்டம்பர் 13]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 21, திரு. ம. தனபால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் :

21—

புதிய பேருந்து வழித்தடம்.

*227 திரு. ம. தனபால் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தாம்பரத்திலிருந்து மாடம்பாக்கம் நூத்தஞ்சேரி வழியாக் திருப்போரூருக்குப் புதிய பேருந்து வழித்தடம் அமைக் கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் விடப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 22; திரு. வி. கே. சின்னசாமி; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

22—

ஜீவா போக்குவரத்துக் கழக கிளை அலுவலகம்.

*284 திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி, புன்செய் புளியம்பட்டியில் ஜீவா போக்குவரத்துக் கழகத்தின் கிளை அலுவலகம் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இதற்கான நிலம் கையகப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான இடம் புன்செய் புளியம்பட்டியைச் சேர்ந்த புன்செய் புளியம்பட்டி கிராமத்திலே புறம்போக்கு நிலம் 4.5 ஏக்கர் இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரவிட்டால் நாளைக்கே கூட அந்த இடத்தைத் தருவதற்கு மாவட்ட வருவாய்த் துறை அலுவலகத்தார் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன். சத்தியமங்கலம் கிளை நிலையம் என்னுடைய தொகுதியில்தான் உள்ளது. அது மிக சின்ன இடத்திலே, குறுகிய இடத்திலே இருப்பதால் 20-க்கும் மேற்பட்ட வண்டிகளை புளியம்பட்டி-சத்தியமங்கலம் மெயின் ரோடில் இரவு நேரத்தில் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஏதாவது வண்டிகள் பிரேக் பிடிக்காமல் அல்லது வேறு விதமாக வந்து மோதினால் இந்த 20, 30 வண்டிகள் சேதம் அடையக்கூடிய நிலைமை உருவாகும். ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்த கிளை நிலையத்தை புஞ்சை புளியம்பட்டியில் அமைத்துத் தருவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆங்காங்கே பல்வேறு இடங்களில் பணிமனைகளை புதியதாக அமைக்கவேண்டுமென்று அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். செலவுகளைக் குறைத்து சிறப்பான முறையில் பேருந்துகளை இயக்கவேண்டுமென்று அவர்கள் அறிவுரைகள் வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இவருடைய கோரிக்கை விரைந்து செயலாக்கப்படும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென்று வாழாமல் தமிழ்நாட்டு மக்களுக்காக வாழும் நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்** வரும்போது அவர்கள் திருக்கரத்தால் இந்த புஞ்சை புளியம்பட்டியில் கிளை நிலையம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுதியாக நீங்கள் தெரிந்து கொள்ளாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சுற்றுப்பயண நிகழ்ச்சி பற்றி கேள்வி நேரத்தில் கொண்டு வந்து சேர்ப்பது சரியல்ல. எனவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன். நீங்கள் வேறுவிதமாக கேட்கலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்து திறந்து வைக்கவேண்டும் என்பது போல கேள்வி கேட்கலாமே தவிர அவர் வருகிறார் என்றால் அது உறுதியாக வந்து விடுகிறது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனக்கென்று வாழாமல் தமிழ்நாட்டு மக்களுக்காக வாழும் நம்முடைய இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் திருக்கரத்தால் அந்த நிகழ்ச்சிக்குப் புஞ்சை புளியம்பட்டியில் ஜீவா போக்கு வரத்துக் கழகத்தினுடைய கிளை நிலையத்திற்கு அவருடைய திருக்கரத்தால் அடிக்கல் நாட்டி துவக்கி வைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6½கோடி தமிழ் மக்களுடைய இதயங்களிலே குடிகொண்டிருக்கிற நம்முடைய ஒப்பற்றத் தலைவராக இருக்கின்ற தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய திருக்கரத்தால் தான் அது திறக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 23; திரு. க. பழனிசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

23—

விவசாயத்திற்கு மின்சாரம் வழங்கும் நேரத்தை அதிகரித்தல்.

*307 திரு. க. பழனிசாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயத்திற்கு மின்சாரம் பகலில் 6 மணி நேரம் வழங்கப்படுவதை 9 மணி நேரமாக அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?